# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022
## 3rd Term Examination – 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru

FWC

| தரம் :- 12 (2022) | வணிகக் கல்வி I | 32 | T | I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் :......................................

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I இற்காக | |
| வினா இலக்கம் | புள்ளிகள் |
| 01 – 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

**01.** சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – தனிநபரொருவருக்குரிய காணியொன்றை அவரினால் வேறொரு தனிநபருக்கு விற்பனை செய்யப்படுதல்.

B – தயிர் உற்பத்திசெய்யும் ஒருவர் தயிர்ச் சட்டிகளை சில்லறை வியாபார நிலையங்களுக்கு விற்பனை செய்தல்.

C – தந்தை தனது மகனுக்கு காணியொன்றை நன்கொடை உறுதிப்பத்திரமொன்றின் மூலம் ஒப்படைத்தல்.

D – சிகை அலங்கார நிலையமொன்றின் சிகை அலங்கரிப்பாளர் ஒருவர் பாடசாலை மாணவன் ஒருவரிற்கு சிகை அலங்காரம் செய்தல்.

E – தாயொருவர் தனது வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளைத் தினந்தோறும் உணவிற்காகப் பயன்படுத்துதல்.

மேலே தரப்பட்ட கூற்றுக்களில் வணிக நடவடிக்கையொன்றாகக் கருதக்கூடிய கூற்றுக்களைக் கொண்ட விடைத் தொகுதியினைத் தெரிவுசெய்க.

(1) A மற்றும் B மாத்திரம் (2) B மற்றும் D மாத்திரம் (3) A மற்றும் C மாத்திரம்
(4) A, B மற்றும் C (5) B மாத்திரம் (……)

**02.** தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவுசெய்யும் ஐந்து அரச அமைப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – ஸ்ரீலங்கா ரெலிகொம் B – ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ்
C – அரச ஒசுசல D – இலங்கை போக்குவரத்துச் சபை
E – வரையறுத்த லங்கா சலுசல

மேற்படி வணிகங்களால் நிறைவுசெய்யப்படும் தேவைகளை ஒழுங்குமுறையாகக் கொண்ட விடையினைத் தெரிவுசெய்க.

(1) A – தொடர்பாடல், B – பாதுகாப்பு, C – சுகாதாரம், D – போக்குவரத்து, E – உடை
(2) A – தொடர்பாடல், B – சுகாதாரம், C – பாதுகாப்பு D – போக்குவரத்து, E – உடை
(3) A – தொடர்பாடல், B – உடை, C – சுகாதாரம், D – போக்குவரத்து, E – பாதுகாப்பு
(4) A – பாதுகாப்பு, B – தொடர்பாடல், C – சுகாதாரம், D – போக்குவரத்து, E – உடை
(5) A – போக்குவரத்து, B – பாதுகாப்பு, C – சுகாதாரம், D – தொடர்பாடல், E – உடை (……)

**03.** அகச் சூழல் காரணிகள் சிலவற்றின் பலவீனங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – குறைவான தொகையினர் காணப்படல்

B – பாதகமான வேலைப்பழக்கம் காணப்படல்

C – நேர் மதிப்பீடும் நேரான முறைமையும் காணப்படாமை

D – வகிபாகங்களிடையே மோதல் உருவாதல்

E – எதிரான மனப்பாங்கினைக் கொண்டிருத்தல்

மேற்கூறப்பட்டவற்றுள் ஊழியர்களின் பலவீனங்களை மாத்திரம் கொண்ட விடையினைத் தெரிவுசெய்க.

(1) B, C மற்றும் E (2) A, B மற்றும் E (3) A, B, D மற்றும் E

(4) B உம் E உம் (5) B உம் D உம் (……)

**04.** பின்வரும் அட்டவணையில் X நிரலில் நிலைபேறான அபிவிருத்தியின் பிரதான உட்கிடைப் பிரிவுகளும் Y நிரலில் அவற்றை உறுதிப்படுத்துவதற்காக வணிகங்களால் மேற்கொள்ளவேண்டிய கருமங்களும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A – பொருளாதார நிலைபேறான அபிவிருத்தி | 1 – வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் |
| B – சூழல் நிலைபேறான பாதுகாப்பு | 2 – மானிடப் பல்லினத்தன்மைகளுக்கு மதிப்பளித்தல் |
| C – சமூக நிலைபேறான அபிவிருத்தி | 3 – சமத்துவத்தன்மையுடன் கருமமாற்றுதல் |
| | 4 – புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்துதல் |
| | 5 – கழிவுப்பொருள் முகாமைத்துவம் |
| | 6 – சூழல்நேயப் பொருட்களை கொள்வனவு செய்தல் |

X நிரலில் தரப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி வகைகளினதும் அவற்றை வணிகங்கள் உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளினதும் சரியான இணைப்பினைக் காட்டும் விடையினைத் தெரிவுசெய்க.

(1) A – 1/6, B – 2/5, C – 3/4 (2) A – 1/4, B – 4/6, C – 2/3 (3) A – 1/4, B – 5/6, C – 2/3

(4) A – 1/2, B – 3/4, C – 5/6 (5) A – 5/6, B – 3/4, C – 1/2 (……)

**05.** வணிக அமைப்புக்கள் தொடர்பான கூற்றுக்கள் சில வருமாறு.

A – வணிக அமைப்புக்கள் உரிய சட்டங்களின் கீழ் பதிவுசெய்வதன் மூலம் சட்ட ஆளுமையைப் பெறுகின்றன.

B – அரச திணைக்களங்கள் சட்ட ஆளுமையுள்ள அமைப்புக்களாகும்.

C – வரையறுத்த தர்ஷனா கம்பனி (Tharshana Company Ltd.) ஒரு பட்டியல்படுத்தப்படாத கம்பனியாகும்.

D – பிணையால் வரையறுத்த கம்பனிகள் பங்கு வழங்கலையும் இலாபப் பகிர்வையும் மேற்கொள்வதில்லை.

E – பலகைகளை உற்பத்திசெய்பவர், தளபாடங்களை உற்பத்திசெய்பவர் மற்றும் தளபாடங்களை விற்பனைசெய்பவர் ஆகியோருக்கிடையே காணப்படும் இணைப்பு நிலைக்குத்தான இணைப்பு ஆகும்.

மேற்படி கூற்றுக்களில் சரியான கூற்றுக்களைக் கொண்ட விடைத் தொகுதியினைத் தெரிவுசெய்க.

(1) A, B, மற்றும் C (2) C, D மற்றும் E (3) C மற்றும் D

(4) A, B, மற்றும் E (5) A, B, C மற்றும் E (……)

**06.** வணிக அமைப்புக்கள் சில X நிரலிலும் அவற்றுக்கான பண்புகள் சில Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X நிரல் | Y நிரல் |
|---|---|
| 1 – வீதி அபிவிருத்தி அதிகார சபை | A – அங்கீகார வணிகம் |
| 2 – வரையறுக்கப்பட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் | B – ஆகக் குறைந்த இயக்குனர் எண்ணிக்கை ஒருவராகக் காணப்படல். |
| 3 – லங்கா கிளியர் (தனிக்) கம்பனி | C – இயக்குனர் சபை நிர்வாகம் காணப்படல். |
| 4 – KFC | D – இலாப நோக்கற்ற தனியார் அமைப்பு |

X நிரலில் தரப்பட்டுள்ள வணிக அமைப்புக்களின் ஒழுங்கிற்கேற்ப Y நிரலில் உள்ள பண்புகளை ஒழுங்குமுறையில் கொண்ட விடை எது?

(1) C, B, D, A (2) C, D, B, A (3) A, B, C, D (4) D, C, B, A (5) C, D, A, B (……)

**07.** முயற்சியாண்மை மூலம் முயற்சியாளர் ஒருவருக்கு கிடைக்கும் தனிப்பட்ட அனுகூலமாகக் கருதப்படக்கூடியது எது?

(1) சந்தைப் பங்கு விரிவடைதல்

(2) புதிய தொழில்வாய்ப்புக்கள் உருவாதல்

(3) சமூக அந்தஸ்து மற்றும் அங்கீகாரம் அதிகரித்தல்

(4) மொத்த உள்நாட்டு வருமானம் அதிகரித்தல்

(5) பிரதேச வளங்களைப் பயன்படுத்த முடிதல் (……)

**08.** சிறிய நடுத்தரளவு வணிகங்களை இனங்காண்பதற்கான நியதிகளை வழங்கிய அமைப்புக்கள் சில X நிரலிலும் அவை வழங்கியுள்ள நியதிகள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| நிரல் X – அமைப்புக்கள் | நிரல் Y – நியதிகள் |
|---|---|
| 1. கைத்தொழில் அபிவிருத்திச் சபை<br>2. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு<br>3. குடிசனப் புள்ளி விபரத் திணைக்களம்<br>4. இலங்கை மத்திய வங்கி | A – முதலிடப்பட்ட மூலதனம் ரூபா 20 மில்லியன் இற்கு மேற்படாத வணிகம்<br>B – 50 கிலோவற்ஸ்க்கு குறைவாக மின்சக்தியைப் பயன்படுத்தும் வணிகம்<br>C – ஈடுபடுத்தியுள்ள மூலதனம் 4 மில்லியனுக்கு மேற்படாத வணிகம்<br>D – ஊழியர் எண்ணிக்கை 25 இற்கு குறைவாக இருக்கும் வணிகம் |

X நிரலில் தரப்பட்டுள்ள அமைப்புக்களின் ஒழுங்கிற்கேற்ப Y நிரலில் தரப்பட்டுள்ள நியதிகளை ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் விடை யாது?

(1) A, D, C, B (2) C, D, A, B (3) C, A, B, D

(4) C, A, D, B (5) B, D, A, C (……)

**09.** இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துதல்

B – வெளிநாட்டு நாணயமாற்றுக் கொள்கையினை நெறிப்படுத்துதல்

C – வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாடு

D – சட்டப்பணத்தினை வெளியிடல்

E – அரசின் கடன் முகாமைத்துவம்

F – ஊழியர் நம்பிக்கை நிதியினை முகாமை செய்தல்

மேற்படி தொழிற்பாடுகளில் மத்திய வங்கியின் பிரதிநிதித்துவ தொழிற்பாடுகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையினைத் தெரிவுசெய்க.

(1) C, E, F (2) A, B, D, E (3) A, B, E

(4) D, E, F (5) A, B, E, F

**10.** **கூற்று A:** முக்கியமானதும் சிக்கலானதும் தகவல்களைக் கூட வாய்மொழி மூலம் தொடர்பாட முடியும்.

**கூற்று B:** வாய்மொழி மூலமான தொடர்பாடலுக்கு மேலதிகமாக அத்தகவல்களை எழுத்து மூலமாக தொடர்பாடல் செய்வது முக்கியமானதாகும்.

மேற்படி இரண்டு கூற்றுக்களிலும்,

(1) A சரியானது B தவறானது. (2) A தவறானது B சரியானது.

(3) A மற்றும் B ஆகிய இரண்டும் தவறானது.

(4) A யும் B யும் சரியானது என்பதுடன் B யினூடாக A விவரிக்கப்படுகிறது.

(5) A யும் B யும் சரியானது என்பதுடன் B யினூடாக A விவரிக்கப்படவில்லை.

11. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது காப்புறுதித் தத்துவங்களையும் அவை தொடர்பான விபரணங்களையும் காட்டுகிறது.

| தத்துவங்கள் | விவரணங்கள் |
|---|---|
| 1. காப்புறுதி செய்யும் உரிமை | A – காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்கு சேதமேற்படுவதற்குக் காரணமான நேரடிச் சம்பவம் |
| 2. மிக்குயர் நம்பிக்கை | B – குறித்த சொத்து அல்லது ஆயுள் தொடர்பாக காப்புறுதி செய்வதற்கு காப்புறுதி செய்பவருக்குள்ள உண்மையான அக்கறை |
| 3. இழப்பீடு | C – காப்புறுதி செய்பவருக்குச் செலுத்திய இழப்பீட்டுக்கான கோரிக்கையை சேதத்துக்கு காரணமாக இருந்த மூன்றாம் தரப்பினரிடம் இருந்து வசூலித்துக் கொள்வதற்கான காப்புறுதி அளிப்பவருக்குள்ள உரிமை |
| 4. பதிலாள் வைப்பு | D – காப்புறுதி அளிப்போரும் காப்புறுதி செய்வோரும் காப்புறுதி உடன்படிக்கைக்குரிய சகல தகவல்களையும் வெளிப்படுத்துதல் |
| 5. அண்மைக் காரணங்கள் | E – உண்மையாக ஏற்பட்ட இழப்பிற்கு மாத்திரம் காப்புறுதி செய்பவருக்கு நட்டஈட்டைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல். |

மேலே தரப்பட்டுள்ள தத்துவங்களின் ஒழுங்கமைவிற்கமைவாக விவரணங்கள் சரியாகப் பொருந்தும் தெரிவு யாது?

(1) B, D, E, A, C (2) A, C, E. D, B (3) B, D, C, E, A

(4) B, D, E, C, A (5) D, B, E, C, A

12. வெளிநோக்கிய அமையவியலைச் சிறப்பாகவும் பலமாகவும் உள்நோக்கிய அமையவியலை எளிமையாகவும் கொண்ட நிறுவனங்கள் பின்பற்றும் அமையவியல் முறை (போக்குவரத்தும் வழங்கல் சேவையும்) எவ்வாறு அழைக்கப்படும்?

(1) அதிகரித்த பெறுமதியில் உள்நோக்கிய அமையவியல் முறை (Heavy Inbound Logistic System)

(2) சமப்படுத்தப்பட்ட அமையவியல் முறை (Balanced logistic system)

(3) அதிகரித்த பெறுமதியில் வெளிச்செல்லும் அமையவியல் முறை (Heavy Outbound Logistic System)

(4) நேர்மாற்று அமையவியல் முறை (Reverse Logistic System)

(5) உள்நோக்கிய அமையவியல் முறை (Inbound Logistic System) (……)

13. பின்வரும் வியாபார நடவடிக்கைகளில் சில்லறை வியாபார நடவடிக்கையினை வெளிப்படுத்தும் கூற்றினைத் தெரிவுசெய்க.

(1) நில்கமல் தளபாட உற்பத்தி வழங்குனரிடமிருந்து மங்களா தளபாட விற்பனையாளர் ஒரு தொகுதி தளபாடங்களைக் கொள்வனவு செய்தல்.

(2) மருந்தகமொன்று பாதுகாப்பான முகக் கவசங்களை உற்பத்திசெய்து வழங்கும் உள்ளூர் நிறுவனமொன்றிடமிருந்து முகக் கவசங்களைக் கொள்வனவு செய்தல்.

(3) கட்டட ஒப்பந்தகாரர் ஒருவர் கட்டுமான வேலைகளுக்குத் தேவையான குறிப்பிட்டளவு சிமெந்துப் பைக்கற்றுக்களைக் கொள்வனவு செய்தல்.

(4) 'சூரியோதய' விளையாட்டுக் கழகம் தமது வருடாந்த வெசாக் தின உணவுப் பந்தலினை மேற்கொள்ள 200 கிலோகிராம் அரிசியினைக் கொள்வனவு செய்தல்.

(5) எழுதுபொருட்கள் விற்பனை நிலையமொன்று தேவையான எழுதுபொருட்களை கொழும்பிலுள்ள வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்தல்.

**14.** சர்வதேச வியாபார நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் X நிரலிலும் அவற்றுக்கான விவரணங்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| **X – ஆவணங்கள்** | **Y – விவரணங்கள்** |
|---|---|
| 1. தரவாணை / இன்டென்ட் | A – ஏற்றுமதிசெய்யப்படும் பொருள் உற்பத்திசெய்த நாட்டினை உறுதிப்படுத்தும் ஆவணம் |
| 2. தோற்றுவாய்ச் சான்றிதழ் | B – சுங்கத்திற்குப் பொருட்கள் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் அப்பொருள்கள் பொறுப்பேற்கப்பட்டது எனக் குறிப்பிட்டு சுங்கத்தினால் ஏற்றுமதியாளருக்கு வழங்கப்படும் ஆவணமாகும். |
| 3. நாணயக் கடிதம் | C – தேவையான பொருட்களை அனுப்புமாறு ஏற்றுமதியாளரைக் கோருதல். |
| 4. கப்பல் தளச் சீட்டு | D - இறக்குமதிசெய்யப்படும் பொருட்கள் தொடர்பான கொடுப்பனவு உறுதிப்படுத்தப்படல். |

X நிரலில் காட்டப்படும் ஆவணங்களின் ஒழுங்கிற்கேற்ப Y நிரலில் தரப்பட்டுள்ள விவரணங்களை ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் விடை எது?

*(1)* C, A, D, B  *(2)* B, D, A, C  *(3)* C, A, B, D

*(4)* D, C, A, B  *(5)* B, A, D, C

**15.** இலத்திரனியல் வியாபாரம் இடம்பெறும் முறைகள் X நிரலிலும் அவற்றுக்கான எடுத்துக்காட்டுக்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| **நிரல் X** | **நிரல் Y** |
|---|---|
| A – B2B | *1* – வணிகமொன்றினால் ஊழியர் சேமஇலாப நிதி செலுத்தப்படல். |
| B – C2C | *2* – பாதணிகள் விற்பனையாளர் ஒருவர் அதன் உற்பத்தியாளருக்கு இணைய மூலமாக கட்டளை பிறப்பித்தல். |
| C – B2G | *3* – வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை (SLIPS) |
| D – G2B | *4* – E-bay வெப்தளத்தினூடான கொடுக்கல்வாங்கல்கள் |

மேற்படி X நிரலிலுள்ள இலத்திரனியல் வியாபாரம் இடம்பெறும் முறைகளையும் Y நிரலிலுள்ள அவற்றுக்கான எடுத்துக்காட்டுக்களையும் இணைக்கும்போது பெறப்படும் சரியான விடையினைத் தெரிவுசெய்க.

*(1)* A-3, B-1, C-2, D-4  *(2)* A-4, B-3, C-1, D-3  *(3)* A-4, B-2, C-1, D-3

*(4)* A-2, B-4, C-3, D-1  *(5)* A-2, B-4, C-1, D-3  (……)

- ***16 – 20 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.***

**16.** (அ) வணிகமொன்று முன்வைக்கின்ற பொருட்கள் அல்லது சேவைகளுக்குச் சமமான உற்பத்திகளை முன்வைக்கின்ற ஏனைய வணிகங்கள் …………………………………. எனப்படுவதோடு அவற்றுக்கான மாற்றுப் பொருட்கள் அல்லது சேவையினை முன்வைக்கின்றவர்கள் …………………………………… ஆவர்.

(ஆ) நுகர்வோரின் அறிவு, அவர்களது வருமானம் போன்ற விடயங்கள் சில வணிகங்களுக்கு ………………………………... உருவாக்குவதுடன், சில வணிகங்களுக்கு அவற்றினால் ………………………………. உருவாகும்.

**17.** (அ) நாட்டின் மொத்த உற்பத்தியானது அந்நாட்டில் வாழும் மொத்த சனத்தொகையினருக்கிடையே சமமானதாகப் பகிரப்பட்டுள்ள முறையைக் குறிப்பது …………………………………..………… என்பதோடு உழைப்பை வழங்குவதற்கு எதிர்பார்ப்புடன் இருக்கும் அனைவரும் யாதேனும் சேவையொன்றில் ஈடுபட்டு இருப்பதுடன், பொருளாதாரத்திற்குரிய அனைத்து உற்பத்தி வளங்களையும் விளைதிறன் கொண்ட உற்பத்திக் கருமமொன்றில் ஈடுபடுத்தி இருத்தல் ………………………………… ஆகும்.

(ஆ) இறக்குமதிப் பொருட்களுக்குச் சுங்க வரியினை அறவிடுவதன் மூலம் இறக்குமதிகளை ……………………………….. முடிவதுடன் உள்நாட்டு உற்பத்திகளை …………………… முடியும்.

**18.** (அ) தனியுடமை வணிகமொன்றின் உடமையானது ……………………… நபரைக் கொண்டுள்ளதுடன் அவ்வணிகங்களின் கடன்கொடுத்தோர்க்கு அவ்வணிகங்கள் மீதான ………………… உயர்வாகக் காணப்படும்.

(ஆ) காசோலையொன்றில் இடப்பட்டுள்ள குறுக்குக் கோடுகளை நீக்கும் அதிகாரம் …………………… இற்கு காணப்படுவதுடன், காசோலையொன்று தொடர்பான வரையுணி அல்லது கட்டளை பெறுபவர் எப்போதும் ……………………………………… வங்கி ஆகும்.

**19.** (அ) ………………………….. மற்றும் ……………………………. என்பன இழப்பீட்டுத் தத்துவத்தின் துணைத் தத்துவங்களாகும்.

(ஆ) சட்டப் பணத்தின் …………………………… வங்கிப் பணத்துடன் ஒப்பிடும்போது உயர்வாகக் காணப்படுவதுடன் வருமானம் உழைக்கும் ஒரு சொத்தாக ……………………….. பணம் காணப்படுகிறது.

**20.** (அ) …………………………… மற்றும் ……………………… என்பன காப்புறுதியின் இரு பிரதான பிரிவுகளாகும்.

(ஆ) தொடர்பாடலில் பெறுபவரால் செவிமடுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட செய்தி தொடர்பாகச் செயற்படும் முறை …………………………. என்பதோடு வணிகமொன்றிற்கும் அதன் வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் ஏனைய வணிகங்களுக்குமிடையில் இடம்பெறும் தொடர்பாடல் ……………………… தொடர்பாடலாகும்.

- ***21 – 25 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையினை தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.***

**21.** நிகழ்காலத்தில் தகவல் தொழிநுட்பத்தின் வளர்ச்சி காரணமாக வணிகத் துறையில் ஏற்பட்ட புதிய போக்குகள் நான்கு தருக.

(1) ………………………………………………… (2) …………………………………………………

(3) ………………………………………………… (4) …………………………………………………

**22.** அரசின் வரி வருமானங்களின் வகைகளில் ஏதேனும் நான்கினைத் தருக.

(1) ………………………………………………… (2) …………………………………………………

(3) ………………………………………………… (4) …………………………………………………

**23.** பங்குடமை வணிகமொன்று கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டிய பண்புகளைத் தருக.

(1) ………………………………………………… (2) …………………………………………………

(3) ………………………………………………… (4) …………………………………………………

**24.** விசேட நிதி நிறுவனங்கள் எனும் வகுதிக்குள் வகைப்படுத்தக்கூடிய 'சந்தை இடையீட்டாளர்கள்' என்பதனுள் உள்ளடங்கும் நிறுவனங்கள் நான்கையும் குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………...

(2) ……………………………………………………………………………………………...

(3) ……………………………………………………………………………………………...

(4) ……………………………………………………………………………………………...

**25.** நவீன போக்குகளாக சில்லறை வியாபார நிலையங்கள் பயன்படுத்தக்கூடிய புதிய தொழிநுட்பங்களைக் குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………...

(2) ……………………………………………………………………………………………...

(3) ……………………………………………………………………………………………...

(4) ……………………………………………………………………………………………...

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022
## 3rd Term Examination – 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru

**தரம் :- 12 (2022) | வணிகக் கல்வி II**

**அறிவுத்தல்கள்:**

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

**பகுதி I**

***01.*** (i) ஆடை தயாரிப்புத் தொழிலில் நீண்ட கால அனுபவத்தைக் கொண்டுள்ள நீலா தற்கால நவநாகரிக மாற்றத்தை உள்வாங்கி தனக்குத் தேவையான ஆடைகளை தானே வடிவமைத்து உற்பத்திசெய்வதோடு அருகிலுள்ள புடவை வியாபார நிலையத்திற்குத் தேவையான ஒரு தொகுதி ஆடைகளையும் உற்பத்தி செய்து வழங்குகிறார்.
மேற்படி விடயத்திலிருந்து பின்வருவனவற்றிற்கு உதாரணங்கள் குறிப்பிடுக.
*1.* நேர் உற்பத்தி *2.* நேரில் உற்பத்தி
*3.* இரண்டாம் நிலை உற்பத்தி *3.* மூன்றாம் நிலை உற்பத்தி *(02 புள்ளிகள்)*

(ii) வெளிநாட்டில் பிறின்டிங் கம்பனியொன்றில் பணியாற்றி இலங்கை திரும்பிய சியாம் என்பவர் கணினி வடிவமைப்பில் அனுபவத்தையும் ஆர்வத்தையும் கொண்டுள்ள டிஷானி என்பவரை முகாமையளாராகக் கொண்டு பிறின்டிங் வணிகமொன்றினை ஆரம்பித்துள்ளார்.
சியாமும் டிஷானியும் வணிகத்தின் வெற்றியில் எவ்வாறு செல்வாக்கு செலுத்த முடியும் என தனித்தனியாக விளக்குக. *(02 புள்ளிகள்)*

(iii) பெரும்பாலும் பேரினச் சூழல் காரணிகள் அண்மிய சூழற் காரணிகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதினூடாக வணிகங்களுக்கான வாய்ப்புக்களையோ அல்லது அச்சுறுத்தல்களையோ உருவாக்கும்.
பொருத்தமான எடுத்துக்காட்டுக்களை முன்வைப்பதன் மூலம் இக்கூற்றினை நியாயப்படுத்துக. *(02 புள்ளிகள்)*

(iv) கழிவுப் பொருட்களை வகைப்படுத்தி வேறு வகையான பொருளொன்றை உற்பத்தி செய்யக்கூடிய பொருளொன்றாக மாற்றுதல் மீள்சுழற்சியாகும். இம்மீள்சுழற்சி இடம்பெறக்கூடிய இரு முறைகளையும் உதாரணங்கள் தந்து குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(v) பெண்களுக்கான கைப்பைகளை உற்பத்திசெய்யும் வணிகமொன்றை நடாத்திவரும் ரோஹினி என்பவர் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் ஆர்வமாகவுள்ளார். வாடிக்கையாளர் தொடர்பாகவும் சமூகம் தொடர்பாகவும் அவரால் நிறைவேற்றப்பட வேண்டிய சமூகப் பொறுப்புக்களை தனித்தனியாகக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

***02.*** (i) நுகர்வோரது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவுசெய்வதிலேயே அனைத்து வணிகங்களும் ஈடுபடுகின்றன. எனினும் வணிக நடவடிக்கைகளால் எதிர்மறையான விளைவுகளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறான எதிர்மறையான விளைவுகள் நான்கினைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) கொவிற்-19 பெருந்தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்திய அரசாங்கம் பொருள் தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்தவும் நுகர்வோரைப் பாதுகாக்கவும் பின்வரும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

1. சீனிக்கான தட்டுப்பாட்டை நீக்குவதற்கு சதோச ஊடாக நிர்ணய விலையில் சீனியினை வழங்கியது.
2. சில அத்தியாவசியப் பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்ததுடன் அதை மீறும் வியாபாரிகள் தொடர்பாக 1977 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு முறைப்பாடு செய்ய கோரியது.
3. நெல் உற்பத்தியாளர்களிடமிருந்து நியாய விலையில் நெல்லினைக் கொள்வனவு செய்தது.
4. வெளிநாட்டு நாணய இருப்புக் கட்டுப்பாட்டைப் பேணுவதற்காக வாகன இறக்குமதி உள்ளிட்ட சில இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தியதுடன் தேவையற்ற அரச செலவுகளைக் குறைத்தது.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விடயம் தொடர்பாக அரசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்தும் முறைகளை இனங்கண்டு அவற்றை எழுதுக. (02 புள்ளிகள்)

(iii) அரசின் பின்வரும் வருமானங்களையும் செலவுகளையும் வரி வருமானம், வரியல்லாத வருமானம், நடைமுறைச் செலவீனம், மூலதனச் செலவீனம் என வகைப்படுத்தி எழுதுக.

துறைமுக நகர கட்டுமானச் செலவுகள்
சுகாதாரப் பரிசோதகர் சம்பளம்
மோட்டார் வாகன அனுமதிப்பத்திரக் கட்டணங்களும் அறவீடுகளும்
கொவிற்-19 தடுப்பூசி மருந்துக்கான செலவு
வருமான வரி
தாமரைக் கோபுர நிர்மாணச் செலவு
நிறுத்திவைத்தல் வரி
லொத்தர சீட்டு விற்பனை வருமானம் (02 புள்ளிகள்)

(iv) (அ) அரசின் இறைக் கொள்கை மற்றும் நாணயக் கொள்கை என்பவற்றின் நோக்கங்களைத் தனித்தனியாகக் குறிப்பிடுக.

(ஆ) நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தும்போது மேற்கொள்ளப்படும் பின்வரும் நடவடிக்கைகளால் வணிகங்களின் இலாபத்தில் ஏற்படும் விளைவினை 'அதிகரிக்கும்' அல்லது 'குறையும்' எனக் குறிப்பிடுக.

1. மத்திய வங்கி வட்டி வீதத்தை (வங்கி வீதத்தை) குறைக்கும்போது
2. மத்திய வங்கி ஒதுக்கு வீதத்தைக் குறைக்கும்போது (02 புள்ளிகள்)

(v) 'பகுத்தறிவுள்ள நுகர்வோர்' ஒருவர் சந்தையில் எவ்வாறு செயற்படுவார் என விளக்குக.
(02 புள்ளிகள்)

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**03.** (i) பல்வேறு பழவகைகளை பொதிசெய்து விற்பனைசெய்யும் வணிகமொன்றுக்கு சென்ற யாமினி பொதிகளைப் பரிசோதித்துக் கொள்வனவுசெய்ய முற்பட்டவேளை விற்பனையாளரால் தடுக்கப்பட்டதுடன் பழங்களின் உற்பத்தி இடம் பற்றிய தகவல்களை வினவியபோது அதுவும் விற்பனையாளரால் வழங்க மறுக்கப்பட்டது. இதனால் சந்தேகமடைந்த யாமினி உரிய பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குச் சென்று முறைப்பாடொன்றைப் பதிவுசெய்தார்.
மேற்படி விடயத்திலிருந்து விற்பனையாளரால் மறுக்கப்பட்ட நுகர்வோர் உரிமைகளையும் அதற்கெதிராக யாமினி பிரயோகித்த நுகர்வோர் உரிமைகளையும் தனித்தனியாகக் குறிப்பிடுக.
(02 புள்ளிகள்)

(ii) (அ) 'பங்குடமை (Partnership)' எனப்படுவது யாது?

(ஆ) பங்காளருக்கிடையேயான பரஸ்பர முகவராண்மை (Mutual agency of partners) என்பது யாது?
(02 புள்ளிகள்)

(iii) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் சிறப்புப் பண்புகளைத் தருக. (02 புள்ளிகள்)

(iv) (அ) 'கூட்டிணைப்புச் சான்றிதழ் (Certificate of incorporation)' எனப்படுவது யாது?

(ஆ) கூட்டுறவு வணிகங்களில் காணப்படும் வளர்ச்சிப் போக்குகள் இரண்டினைக் குறிப்பிடுக.
(02 புள்ளிகள்)

(v) உற்பத்தி அங்கீகார வணிகத்திலிருந்து (Production Franchise) உற்பத்திப் பொருள் அங்கீகார வணிகம் (Product Franchise) எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை உதாரணம் மூலம் விளக்குக.
(02 புள்ளிகள்)

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## பகுதி II

**04.** (i) ஆடை வடிவமைப்பு (Fashion Design) தொடர்பான உள்வாரி பல்கலைக்கழக பட்டக் கற்கைநெறியொன்றினை நிறைவுசெய்த நண்பர்களான பானுவும் ஸ்வாதியும் பிரபல்ய இந்திய ஆடை வணிகமொன்றிலிருந்து அனுமதியினைப் பெற்று அங்கீகார வணிகம் ஒன்றினை ஆரம்பிக்க எண்ணுகின்றனர். இவ்வணிக அமைப்பு மூலம் நன்மைகள் காணப்படினும் சில வரையறைகளும் உள்ளன. அவ்வாறான வரையறைகள் நான்கினைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) கோகுலன் என்பவர் இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தி விவசாயப் பொருட்களை உற்பத்திசெய்து விற்பனைசெய்யும் முயற்சியாண்மையில் ஈடுபட்டுள்ளார்.

(அ) கோகுலன் தனது முயற்சியாண்மையில் வெற்றியடைவதற்கு கொண்டிருக்க வேண்டிய முயற்சியாண்மைப் பண்புகள் இரண்டினைத் தருக.

(ஆ) கோகுலன் தனது முயற்சியாண்மைப் பண்புகளையும் திறன்களையும் விருத்திசெய்து கொள்வதற்கான முறைகள் இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*

(iii) (அ) சிறிய நடுத்தரளவு வணிகங்களை ஊக்குவிப்பதற்கு அரசு எடுத்திருக்கும் நிதிசார்ந்த ஊக்குவிப்புக்கள் இரண்டு தருக.

(ஆ) சிறிய நடுத்தரளவு வணிகங்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்கும் அரச நிறுவனங்கள் எவை? *(02 புள்ளிகள்)*

(iv) கொவிற்-19 பெருந்தொற்று நிலைமை காரணமாக இணைய மூலமான வகுப்புக்களில் கலந்துகொள்வதற்காக கையடக்கத் தொலைபேசியொன்றினைக் கொள்வனவுசெய்ய விரும்பிய மாணவனான மகிஷ்ணன் என்பவர் ரூபா 18 500 என விலைகுறிக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசியொன்றினை ரூபா 15 000 இனை உடன் காசாக செலுத்தியும் மிகுதியினை ஒரு வார கடன் அடிப்படையிலும் கொள்வனவு செய்தார். எதிர்காலத்தில் தேவையான கையடக்கத் தொலைபேசிகளைக் கொள்வனவுசெய்வதற்காக அன்றைய விற்பனைகள் மூலம் பெறப்பட்ட காசுப் பெறுவனவுகளை விற்பனையாளர் வங்கியில் வைப்புச் செய்தார்.
இங்கு குறிப்பிடப்பட்ட பணத்தின் தொழிற்பாடுகளை எடுத்துக்காட்டுக்களுடன் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(v) பின்வரும் நிதி நிறுவனங்களை உள்ளடக்கக்கூடிய இலங்கையின் பிரதான நிதி நிறுவன வகுதிகளைப் பெயரிடுக.

1. உரிமம்பெற்ற விசேட வங்கி
2. கூட்டுறவு கிராமிய வங்கி
3. உரிமம்பெற்ற நுண்கடன் கம்பனிகள்
4. ஊழியர் நம்பக்கை நிதி *(02 புள்ளிகள்)*

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**05.** (i) உரிமம்பெற்ற வணிக வங்கிகளின் கடன் சேவைகளை வகைப்படுத்திக் காட்டுக. *(02 புள்ளிகள்)*

(ii) கையடக்கத் தொலைபேசி விற்பனை மற்றும் திருத்த வேலைகள் தொடர்பான வணிகமொன்றை நடாத்தும் பிரியந்தன் என்பவர் அதிகரித்துள்ள வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்களை நடைமுறைக் கணக்கொன்றின் ஊடாக மேற்கொள்ள விரும்பி, இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பித்து காசோலைப் புத்தகமொன்றைப் பெற்றுள்ளார். காசோலை எழுதுவதில் முன்னனுபவத்தைக் கொண்டிராத அவருக்கு அதனை எழுதும்போது கவனிக்க வேண்டிய விடயங்களைத் தெரியப்படுத்துக. *(02 புள்ளிகள்)*

(iii) இலத்திரனியல் அட்டைகள் மூலமான கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துவதற்காக நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைளைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iv) (அ) இலங்கையிலுள்ள வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை (Sri Lanka Interbank Payment System- SLIPS) இனை நடைமுறைப்படுத்துவதற்காக மத்திய வங்கியாலும் வணிக வங்கிகளாலும் மூலதனமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனத்தினைப் பெயரிடுக.

(ஆ) லங்கா செட்டில் முறைமை (Lanka Settle System) என்பதனுள் உள்ளடக்கப்படும் இரண்டு கொடுப்பனவு தீர்ப்பனவு முறைகளையும் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(v) (அ) காசோலையின் காந்த மை நிரலில் காணப்படக்கூடிய இலக்கங்களை ஒழுங்குமுறையில் தருக.

(ஆ) இதில் காசோலையிலும் காசோலை அடியிதழிலும் காணப்படும் இலக்கம் எது?

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**06.** (i) காப்புறுதி ஒப்பந்தத்துடன் வெளிநபர்கள் (மூன்றாம் தரப்பினர்) தொடர்புபடும் சந்தர்ப்பங்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களை அவதானிக்க.

**கூற்று A** – வணிக நடவடிக்கைகளால் வெளிநபர்களுக்கு ஏற்படுகின்ற நட்டங்களுக்கான இழப்புக்களை காப்புறுதிக் கம்பனி மூலம் வழங்குவதற்காக காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றினை வணிகமொன்று மேற்கொண்டது.

**கூற்று B** – காப்புறுதிசெய்யப்பட்ட சொத்தொன்றிற்கு வெளிநபர்கள் மூலம் ஏற்படுத்தப்பட்ட நட்டமொன்று தொடர்பாக அவர்களிடமிருந்து இழப்பீட்டினைப் பெறுவதற்கான உரிமையினைக் காப்புறுதிக் கம்பனிக்கு வழங்கி காப்புறுதிக் கம்பனியிடமிருந்து மட்டுமே வணிகமொன்று இழப்பீட்டினைப் பெற்றது.

மேலே தரப்பட்டுள்ள கூற்று A உடன் தொடர்புபட்ட காப்புறுதி ஒப்பந்த வகையினையும் கூற்று B உடன் தொடர்புபட்ட காப்புறுதித் தத்துவத்தினையும் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) பின்வரும் தொடர்பாடல் ஊடகங்களுக்குப் பொருத்தமான தொடர்பாடல் முறைகளை உரிய வெற்றிடத்தில் எழுதுக. (முதலாவது செய்துகாட்டப்பட்டுள்ளது.)

| **தொடர்பாடல் ஊடகங்கள்** | **அகரீதியான / புறரீதியான** | **வாய்மொழி மூல / எழுத்து மூல / சைகை குறியீடு மூல** | **இலத்திரனில் / இலத்திரனியல் அல்லாத** |
|---|---|---|---|
| 1. கையடக்கத் தொலைபேசி | (A)…*புறரீதியான*…. | (B)…*வாய்மொழிமூல*.. | (C)..*இலத்திரனியல்*… |
| 2. குறுஞ்செய்தி (SMS) | (A)………………… | (B)………………… | (C)………………… |
| 3. பொதியிடல் குறியீடு | (A)………………… | (B)………………… | (C)………………… |
| 4. பத்திரிகை | (A)………………… | (B)………………… | (C)………………… |
| 5. கருத்தரங்கு | (A)………………… | (B)………………… | (C)………………… |

*(02 புள்ளிகள்)*

(iii) க.பொ.த உயர்தரம் சித்தியடைந்தவரான மதுரா என்பவர் அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு விண்ணப்பித்து எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகத் தேர்வுக்காக கொழும்பு செல்வதற்காக தனது வீட்டிலிருந்து முச்சக்கர வண்டியொன்றின் மூலம் புகையிரத நிலையம் சென்று அங்கிருந்து புகையிரதம் மூலம் கொழும்பு சென்றடைந்தார்.
மதுரா பயன்படுத்திய போக்குவரத்தின் அடிப்படைக் கூறுகளைப் பெயரிட்டு அவற்றுக்குப் பொருத்தமான உதாரணங்களை மேற்படி சம்பவத்திலிருந்து எழுதுக. *(02 புள்ளிகள்)*

(iv) (அ) "விற்பனையகங்களற்ற சில்லறை வியாபாரம் (Non-store Retailing)" எனப்படுவது யாது?
(ஆ) சில்லறை வியாபாரத்தில் நேர்ச் சந்தைப்படுத்தல் இடம்பெறும் முறைகள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(v) (அ) சர்வதேச வியாபாரத்தில் 'ஒப்பீட்டுக் கிரய நன்மைகள்' எனப்படுவது யாது?
(ஆ) தீர்வை வரி அறவீட்டுக்கு மேலதிகமாக சுதந்திர வர்த்தகத்தில் தாக்கத்தையேற்படுத்தக் கூடிய தடைகள் இரண்டினைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

*****